மனிதவளமேலாண்மை (ஆர்)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009.
விசுவாவசு, ஐப்பசி - 29
திருவள்ளுவர் ஆண்டு- 2056
தொலைபேசிஎண். 044-2567 5182
Email:adlsio2.hrm@tn.gov.in

**கடித எண்.8985/ஆர்/2025 - 1, நாள் 15.11.2025.**

அனுப்புநர்
டாக்டர். என். சுப்பையன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர். (மு.கூ.பொ.,)

பெறுநர்
தலைமைச் செயலக அனைத்து துறைகள் மற்றும்
அனைத்து துறை தலைமையகங்கள்,
(தொடர்புடைய தலைமைச் செயலக துறைகள் வழியாக),
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,

ஐயா / அம்மையீர்,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழ் தகவல் வழங்கும்போது கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகள் தொடர்பாக – அறிவுறுத்தங்கள் – வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. மத்திய அரசின் Office Memorandum No.1/31/2013-IR, Government of India, Ministry of Personnel, Public Grievances and Pension Department, நாள் 08.01.2014.
2. மத்திய அரசின் Office Memorandum No.1/1/2013-IR, Government of India, Ministry of Personnel, Public Grievances and Pension Department, நாள் 07.10.2016.
3. அரசுக் கடிதம் எண்.8055285/ஆர்/2024-1, மனிதவள மேலாண்மைத் துறை, நாள் 07.09.2024.

பார்வையில் காணும் இனங்களின்மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005 பிரிவு 6(2)-இன் படி, தகவலுக்காக கோரிக்கை செய்கிற விண்ணப்பதாரர் ஒருவர், அந்தத் தகவலினைக் கோருவதற்கான காரணத்தையோ அல்லது அவரை தொடர்பு கொள்வதற்காகத் தேவைப்படலாகிற விவரங்களைத் தவிர, தனிப்பட்ட பிற விவரங்கள் எவற்றையுமோ அளிக்குமாறு கோரப்படுதல் ஆகாது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இது தொடர்பாக, மத்திய அரசின் 08.01.2014 நாளிட்ட அலுவலகக் குறிப்பாணையில், கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு

(த.பி.பா)

33290/2013-இன்மீது 20.11.2013 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையில், வெளியிடப்பட்டுள்ள ஆணையினை கடைபிடிக்க ஏதுவாக அனைத்து பொது அதிகார அமைப்பிற்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, இத்துறையின் 18.02.2014 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு, அதன் பின்னர் 07.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

4. மேலும், மத்திய அரசின் 08.01.2014 நாளிட்ட அலுவலகக் குறிப்பாணையில், பொது அதிகார அமைப்பின் இணையதளத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-இன் கீழ் விண்ணப்பம் அளிக்கும் விண்ணப்பதாரர்களின் விவரங்களை அதாவது பெயர், பதவி, முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் ஆகியவற்றை வெளியிடக்கூடாது என்பதற்கான அறிவுறுத்தங்களையும் வெளியிட்டுள்ளது.

5. மேற்காணும் சூழலில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளிக்கும் விண்ணப்பதாரர்களின் அடையாளங்கள் பொதுவெளியில் வெளியிடப்படுவதாக பல்வேறு புகார்கள் அரசுக்கு வரப்பெறுவதால், விண்ணப்பதாரர்களின் பெயர், பதவி, முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண். மற்றும் கைபேசி எண்கள் ஆகியவற்றின் விவரங்களை வெளியிடக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தங்களை தவறாது கடைபிடிக்குமாறும், விண்ணப்பதாரரின் விவரங்களை தங்களது துறையின் இணையதளத்திலோ அல்லது வேறு வழிமுறைகளிலோ வெளியிடுவதை தவிர்க்குமாறும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

6. மேலும், இப்பொருண்மை குறித்து அரசுக்கோ அல்லது தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கோ மேற்கொண்டு புகார்கள் வராத வண்ணம் செயல்படுமாறு அனைத்து பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கும் இதன் மூலம் மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

பா. [signature] 15/11/25

அரசு செயலாளருக்காக

15/11/25

நகல்:
பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண். 19, அரசுப் பண்ணை இல்லம்,
பேரன்பேட், நந்தனம்,
சென்னை- 600 035.